13.4.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### குமரி அணைப் பகுதிகளில் மழை: அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

குமரி மாவட்டத்தில் அணைப் பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. அதிகபட்ச மாக பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 228 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. சனிக்கிழமை இரவு தொடங்கி ஞாயிற்றுக்கிழமை காலை வரை மாவட்டம் முழுவதும் பெய்த மழையளவு (மி.மீட்டரில்): பேச்சிப்பாறை 19.4, பெருஞ்சாணி 22.8, சிற்றார்1- 27.6, சிற்றார்2- 57.2, மாம்பழத் துறையாறு 6.2, சுருளோடு 17, பாலமோர் 5.5, திற்பரப்பு 19 மி.மீட்டர் மழை பதிவாகியிருந்தது. நீர்வரத்து: பேச்சிப்பாறை அணைக்கு 228 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு 99 கனஅடி தண்ணீரும், சிற்றார்1 அணைக்கு 72 கனஅடி தண்ணீரும், சிற்றார்2 அணைக்கு 117 கனஅடி தண்ணீரும், மாம்பழத்துறையாறு அணைக்கு ஒரு கனஅடி தண்ணீரும் வந்து கொண்டிருந்தது.

### தமிழகம், புதுச்சேரியில் பலத்த மழைக்கு வாய்ப்பு

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## தமிழ்ப் புத்தாண்டு: பூக்கள் விலை அதிகரிப்பு

தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு சென்னை கோயம்பேடு சந்தையில் பூக்கள் விலை சற்று அதிகரித்துள்ளது. பொங்கல் பண்டிகையின்போது மல்லிகை, முல்லை உள்ளிட்ட பூக்கள் கிலோ ரூ.400 முதல் ரூ.700 வரை விற்பனை செய்யப்பட்டன. ஆனால் அடுத்து வந்த மாதங்களில் திண்டுக்கல், மதுரை உள்பட பூக்கள் சாகுபடி செய்யப்படும் பகுதியில் உற்பத்தி அதிகரித்ததால் அவற்றின் விலை குறையத் தொடங்கியது. பெரும்பாலான பூக்கள் கிலோ ரூ.50-க்கும் குறைவாகவே விற்பனையானது. இந்த நிலையில் தமிழ்ப் புத்தாண்டை (ஏப்.14)முன்னிட்டு, பூக்களின் விலை சற்று அதிகரித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை ஒரு கிலோ மல்லிகை ரூ.130-க்கு விற்கப்பட்டது. இது குறித்து பூ மார்க்கெட் வியாபாரிகள் சங்கத் தலைவர் அருள் விசுவாசம் கூறியது: பொதுவாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் பூக்களின் வரத்து குறைவாக இருக்கும். ஆனால் தேவை அதிகமாக இருக்கும். அதனால் அவற்றின் விலை உயர்ந்து காணப்படும். பொங்கல் பண்டிகையின் போது 60 டன்கள் விற்பனைக்காக கொண்டுவரப்பட்டன. தற்போது அனைத்துப் பூக்களின் உற்பத்தியும் அதிகரித்துள்ளதால் தினமும் 100 முதல் 120 டன்கள் வரை கொண்டு வரப்படுகின்றன. எனினும் தமிழ்ப் புத்தாண்டு நெருங்குவதால் கடந்த இரண்டு நாள்களாக பூக்களின் விலை அதிகரித்துள்ளது. வரும் நாள்களில் பூக்களுக்கான தேவை அதிகமாக உள்ளதால் அவற்றின் விலை தொடர்ந்து அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றார்.

**பூக்களின் விலை விவரம்**

**(பழைய விலை அடைப்புக் குறிக்குள்):**

முல்லை- ரூ.110 (60)

மல்லிகை- ரூ.120 (70)

அரளி- ரூ.100 (60)

சாமந்தி- ரூ.100 (65)

கோழிக்கொண்டை- ரூ.35 (20)

செண்டுமல்லி- ரூ.25 (15)

ரோஜா- ரூ.80 (45)

## 17-இல் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வரும் வெள்ளிக்கிழமை (17-ஆம் தேதி) விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெற உள்ளது. இதுகுறித்து ஆட்சியர் வி.கே. சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விவசாயிகள் குறைதீர்க் கூட்டம், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஊராட்சி அலுவலகக் கூட்டரங்கில் வரும் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகள், விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு விவசாயம், அதுசார்ந்த கோரிக்கைகளை மனுவாக அளிக்கலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## சொட்டுநீர் பாசன விவசாயிகளுக்கு வெள்ளை பொட்டாஷ் உரம்

தேனி: தேனி மாவட்டத்தில் சொட்டுநீர் பாசனத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு நீரில் கரையும் தன்மையுள்ள வெள்ளை பொட்டாஷ் உரங்கள் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன. சிவப்பு நிறத்தில் உள்ள

சாதாரண ரக பொட்டாஷ் உரங்கள் நீரில் உடனே கரையாது. இந்த உரத்தை பயன்படுத்தும் சொட்டுநீர் பாசன விவசாயிகள், முதலில் உரத்தை வேறு பாத்திரங்களில் கரைத்து அதன் பின் சொட்டுநீர் பாசன குழாய்களில் செலுத்தி பயன்படுத்த வேண்டும். இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் பணிச்சுமை ஏற்பட்டு வந்தது. இதையடுத்து நீரில் கரையும் வெள்ளை பொட்டாஷ் உரத்தை அரசு வழங்கி உள்ளது. இந்த உரங்கள் தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. காமயகவுண்டன்பட்டி, எரகநாயக்கனூர், வடபுதுப்பட்டி, கூடலூர், நாகலா புரம், சீப்பாலக்கோட்டை, லட்சுமிபுரம், ராயப்பன்பட்டி, உப்புக்கோட்டை, சின்னமனூர், உத்தமபாளையம், அனுமந்தன்பட்டி, கம்பம் தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்கள் மூலம் உரம் வழங்கப்படுகிறது.

## ரூ. 1.65 கோடிக்கு மஞ்சள் வர்த்தகம்

ஆத்தூர் : ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர் மற்றும் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 3,100 மூட்டை மஞ்சள், 1.65 கோடி ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர் மற்றும், கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், கடலூர் ஆகிய வெளி மாவட்டம் மற்றும் ஆத்தூர் சுற்றுவட்டார பகுதியைச் சேர்ந்த, 300க்கும் மேற்பட்ட விவசாயிகள் விளைவித்த, 3,100 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.விரலி மஞ்சள் குவிண்டால், 8,609 முதல்,10,699 ஆயிரம் ரூபாய் வரை, உருண்டை மஞ்சள் குவிண்டால், 7,069 ரூபாய் முதல், 8,889 ரூபாய் வரை விற்பனையானது. ஏலத்தில், 3,100 மூட்டை மஞ்சளை, 1.65 கோடி ரூபாய்க்கு, வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.

## <u>கனமழையால் வெள்ளப்பெருக்கு</u>

நாமக்கல் : நாமக்கல் மாவட்டத்தில் நேற்று திடீரென கனமழை பெய்ததால், தாழ்வான பகுதிகளில், மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. ஒரு மணி நேரம் நீடித்து மழை, விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் நேற்று காலை முதல், கோடைகால வெட்பத்தின் காரணமாக, வெயில் வாட்டி வதைத்தது. அதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாக பாதித்தது. பலரும் வெளியே வரமுடியாமல் வீட்டுக்குள் முடங்கினர். இந்நிலையில், நேற்று மாலை, 6.00 மணிக்கு திடீரென வானில் கருமேகம் சூழ்ந்தது. அதை தொடர்ந்து, இரவு, 7 மணிக்கு கனமழை பெய்ய துவங்கியது.எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல், அமைதியாக மழை பொழிந்ததால், ஒரு மணி நேரம் நீடித்தது. அதன் காரணமாக, தாழ்வான பகுதிகளில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. பகலில் வெயிலில் வாடிய மக்கள், இரவில் சில்லென்று குளிர்ந்த காற்று வீசியதால், மகிழ்ச்சி அடைந்தனர்.அதேபோல், மோகனூர், சேந்தமங்கலம் பகுதியிலும் கனமான மழை பெய்த்து. ராசிபுரம், பள்ளிபாளையம் பகுதியில் லேசான மழை பெய்தது. சாலையில் தண்ணீர் தேங்கியதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது. திடீரென பெய்த கனமழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சேலம் மார்க்கெட்டுக்கு மாம்பழ வரத்து 15 டன்னாக உயர்வு**



சேலம்: தமிழகத்தில் சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் அதிகளவில் மாம்பழங்கள் உற்பத்தியாகின்றன. கடந்த வாரம் வரை சேலம் மார்க்கெட்டுக்கு 5 முதல் 6 டன் மட்டுமே மாம்பழங்கள் விற்பனைக்கு வந்தது. தற்போது மாமரங்களில் அறுவடை சுறுசுறுப்படைந்துள்ளதால், மார்க்கெட்டுக்கு மாம்பழங்கள் வரத்து அதிகரித்துள்ளது. சீசன் களைக்கட்டியுள்ளதால் மார்க்கெட்டில் வாடிக்கையாளர்களின் வரத்து அதிகரித்து காணப்படுகிறது. இது குறித்து சேலம் கடைவீதி மாம்பழ வியாபாரிகள் கூறியதாவது: சேலம் மார்க்கெட்டுக்கு மாம்பழங்கள் வரத்து அதிகரித்துள்ளது. இங்கு விற்பனைக்கு வரும் மாம்பழத்தை வாடிக்கையாளர் கள் 10 கிலோ முதல் 20 கிலோ வரை பெட்டிகளிலும், 12 பழங்கள் கொண்ட ஒரு டஜனும், கிலோ கணக்கிலும் வாடிக்கையாளர்கள் வாங்கிச் செல்கின்றனர். வரும் 20ம் தேதிக்கு மேல் 25 முதல் 30 டன்னாக வரத்து உயரும். நேற்று நிலவரப்படி ஒரு கிலோ மாம்பழம் ரகத்தை பொறுத்து ரூ.50 முதல் ரூ.150 வரை விற்கப்படுகிறது. இவ்வாறு மாம்பழ வியாபாரிகள் கூறினர்.

## திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள் அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்பனை செய்யுங்கள் வேளாண்மை அதிகாரி வேண்டுகோள்

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்பனை செய்யுங்கள் என்று வேளாண்மை அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். திருவண்ணாமலை வேளாண்மை துணை இயக்குனர்(வேளாண் வணிகம்) கி.ராஜேந்திரன் வெளியிட்டுள்ள கூறி இருப்பதாவது:இந்தியாவில் எள் உற்பத்தியில் 70 சதவீதத்தை மேற்கு வங்கம், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், குஜராத் ஆகிய 4 மாநிலங்கள் உற்பத்தி செய்கின்றன. மீதமுள்ள 30 சதவீதம் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரம், உத்தரபிரதேச மாநிலங்கள் உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டம் எள் உற்பத்தி யில் முன்னணி வகிக்கிறது. எள் பாசன சாகுபடி டிசம்பர்-ஜனவரியில் பயிரிடப் பட்டு மார்ச்-மே மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. ஏற்றுமதி சந்தையை பொருத்தமட்டில் சீனா தனக்கு தேவையான எள்ளை ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து நல்ல தரத்துடன் இந்தியாவை விட குறைந்த விலையில் இறக்குமதி செய்கின்றன. கடந்த தைப்பட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் எள் சாகுபடி பரப்பு 400 எக்டேர் அதிகரிக்கப்பட்டுள்ளது.தற்சமயம் சிவப்பு எள் சிவகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் குவிண்டாலுக்கு ரூ.6800 முதல் ரூ.8 ஆயிரம் வரை விற்கப்படுகிறது.ஏப்ரல்-மே அறுவடைக்கு வரும் தரமான சிவப்பு எள்ளின் விலை குவிண்டாலுக்கு ரூ.7500 முதல் 7700 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் விலை அதிகரிக்க வாய்ப்பு இல்லை. ஆகவே திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

## <u>கொல்லிமலையில் இலவச நாட்டுக்கோழிகூண்டு வழங்கல்</u>

சேந்தமங்கலம், :நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை வாழவந்திநாடு ஊராட்சி பெருங்கிராய்பட்டியில் மத்தியஅரசின் வேளாண்மை அறிவியல் கழகத்தின் சார்பில் இலவச நாட்டு கோழிகள் மற்றும் இடுபொருட்கள் வளர்ப்பு கூண்டு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவிற்கு நாமக்கல் மாவட்ட கால்நடை மருத்துவ கல்லூரி முதல்வர் துரைசாமி தலைமை வகித்தார். கொல்லிமலை ஒன்றிய குழுதலைவர் சந்திரசேகரன் கலந்து கொண்டு 71 பயனாளிகளுக்கு நாட்டுகோழி, கூண்டு இடுபொருட்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய குழு துணை தலைவர் மாதேஸ்வரி பேராசிரியர்கள் ரமேஸ், சரவணகுமார் இணை பேராசிரியர் கர்ணன், உதவி பேராசிரியர் கண்ணன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## <u>ஜுன், ஜுலை மாதங்களில்மக்காசோளம் விலை எவ்வளவு? வேளாண் விற்பனை மையம் கணிப்பு</u>

திருச்சி,: ஜுன், ஜுலை மாதங்களில் மக்காசோளம் விலை எவ்வளவு? என வேளாண் விற்பனை மையம் கணித்துள்ளது.இந்தியாவில் மக்காசோள சாகுபடி பரப்பு நடப்பாண்டில் 12.22 லட்சம் எக்டராகும். இது கடந்த ஆண்டு சாகுபடி பரப்பான 12.63லட்சம் எக்டர் பரப்பைவிட 3.24சதவீதம் குறைவாகும்.மக்காசோளம் பயிரிடும் பரப்பில் 4வது இடத் தில் தமிழ்நாடு உள்ளது.மக்காசோளம் பயிரிடும் பரப்பானது கடந்தாண்டை விட 27சதவீதம் அதிகரித்த தோடு நடப்பா ண்டில் 1.74 லட்சம் எக்டராக உள்ளது. தூத்துக்குடி, விருதுநகர்,திண்டுக்கல்,திருநெல்வேலி,திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்கள் ரபீ மக்காசோளம் பயி ரிடும் முக்கிய மாவட்டங்களா கும். கர்நாடகாவில் இருந்து வரும் வரத்து முடிவடைந்த நிலையில், தமிழ்நாட்டில் வரத்து துவங்கியுள்ளது. தற் போது மக்காசோளம்

குவிண்டாலுக்கு ரூ.1,330 முதல் ரூ.1,360 வரை விற்கப்படுகிறது. குறைந்த தர முள்ள மக்காசோளம் (அதிகம் ஈரப்பதம் மற்றும் சேதம் அடைந்த தானியம்) சராசரி தரமான மக்கா சோளத் தை விட விலை குவிண்டாலுக்கு ரூ.50 முதல் ரூ.100 வரை குறைவாக விற்கப்படுகிறது.திருச்சி வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மைய துணை இயக்குனர் சந்திரசேகர் கூறு கையில், விவசாயிகள் சந்தை முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த 14ஆண்டுகளாக உடு மலைப் பேட்டை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நிலவிய மக்காசோளத்தின் விலையை தமிழ்நாடு வேளா ண்மை பல் கலைக்கழகத்தில் வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும், வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மைய அலுவலகம் ஆராய்ந்தது. விலை மற்றும் வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில், தரமான மக்கா சோளத்தின் விலை ஜுன், ஜுலை மாதங்களில் குவிண்டாலுக்கு ரூ.1420-ரூ. 1450 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் அறுவடை செய்த மக்காசோளத்தை சேமித்து வைத்து விற்க பரிந்துரைக்கப்படுகின்றனர் என்றார்.

## <u>கூவாட்டுபட்டி விவசாயிகளுக்கு வரிசை நடவு பயிற்சி</u>

புதுக்கோட்டை, : புதுக் கோட்டையை அடுத்த அன்னவாசல் வட்டாரம் கூவாட்டுபட்டி கிராமத்தில் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) மற்றும் வேளா ண்மை வணிகத் துறை சார்பில் விவசாயி களுக்கு அறிமுக கூட்டம், உளுந்து விதை நேர்த்தி மற்றும் வரிசை நடவு பயிற்சி நடத்தப்பட்டது. அன்னவாசல் வேளா ண்மை உதவி இயக்குநர் சிங்காரம் தலைமை வகித் தார். வேளாண்மை அறிவி யல் மையம், வம்பன் வேளா ண் விஞ்ஞானி மதியழகன் (பயிர் பாதுகாப்பு) உளுந்து விதையில் விதை நேர்த்தி செய்வதால் ஏற்படும் நன் மைகள் குறித்து பயிற்சி

அளித்தார். ஆராய்ச்சி நிறு வன திட்ட ஒருங்கிணைப் பாளர் தட்சிணாமூர்த்தி வரிசை நடவின் முக்கியத்துவம் மற்றும் அதனால் ஏற்படும் மகசூல் நன்மை களை பற்றி பயிற்சி அளித் தார். வயல்வெளி செயல் விளக்கத்தினை ஏற்படுத்தி தந்த விவசாயி சிங்கமுத்துவிற்கு ஊக்க தொகையாக காசோலை வழங்கப்பட்டது. முடிவில் வேளா ண்மை வணிக அலுவலர் சுந்தரேசன் நன்றி கூறினார்.

## <u>நிலக்கோட்டை பகுதிகளில் செவ்வந்தி பூ சீசன் துவக்கம்</u>

நிலக்கோட்டை, : நிலக்கோட்டை பகுதிகளில் செவ்வந்திபூ சீசன் துவங்கியதால், தோட்டங்களில் பூக்கள் பூத்து குலுங்குகிறது. நிலக்கோட்டை சுற்று வட்டார பகுதிகளான மிளகாய்பட்டி, தோப்புப ட்டி, தம்பிநாயக்கன் பட்டி, சீத்தாபுரம்,ஆண்டிபட்டி, மைக்கேல் பாளையம், கோட்டூர் கிராமங் களில் அதிகளவில் செவ்வந்தி பூக் கள் விவசாயம் நடந்தது. கடந்த ஆண்டுகளில் பருவ மழை இல்லாததால் பூ விவசாயம் செய்த பெரும்பாலான நிலங்கள் தரிசாக கிடக்கிறது. இந்நிலையில் ஒரு சில விவசாயிகள் இருக்கின்ற தண்ணீரை வைத்து செவ்வந்தி பூ விவசாயம் செய்தனர். அப்பூக்கள் பூத்து குலுங்குவதை பார் த்து விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதே போல் இந்தாண்டு பூக்க ளின் விலையும் நன்றாக இருக்க வேண்டுமே என்ற கவலையும் அவர்களை வாட்டுகிறது. இதுகுறித்து விவசாயி அழகர்சாமி கூறுகையில், செவ்வந்தி பூக்களை ஆனி மாதம் பயிர் செய்வோம். அவை நன்றாக விளைந்து ஐப்பசி மாதம் பூக்க ஆரம்பிக்கும். கடந்த 3 வருடங்களாக பருவமழை இல்லாததால் செவ்வந்தி பூ விவ சாயம் வெகுவாக குறைந்து விட்டது. அப்படியிருந்தும் பூக்களுக்கு உரிய விலை கிடைக்க வில்லை. இப் போது சீசன் துவங்கி உள்ள தால், பல்வேறு பகுதிகளி லிருந்து மார்க்கெட்டிற்கு பூக்கள் வரத்து இருக்கும். தற்போது

கிலோ ரு.20க்கு விற்பனையாகும் செவ்வந்தி பூ இன்னும் சில நாட்களில் விலை உயரும் என்ற நம்பிக்கையுடன் இருக்கின்றோம் என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மாவட்டம் முழுவதும் 5-வது சிறுபாசன கணக்கெடுக்கும் பணி புள்ளியியல் இணை இயக்குநர் ஆய்வு**

தர்மபுரி மாவட்டத்தில் 5-வது சிறுபாசன கணக்கெடுக்கும் பணியை மண்டல புள்ளியியல் இணை இயக்குநர் கமலக்கண்ணன் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கணக்கெடுக்கும்பணி

தர்மபுரி மாவட்டத்தில் 5-வது சிறுபாசன கணக்கெடுக் கும் பணி 2013-14 ம் ஆண்டை அடிப்படை ஆண்டாக கொண்டு நடை பெற்று வருகிறது. மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளை கண்டறிதல், நீர்நிலைகளின் ஆழம், அகலம், பாசனம் செய்வதற்கு தகுதி யான நிலம், விவசாயத் திற்கு பயன்படுத்தப் பட்ட நிலம், நீர்நிலைகள் தொடங்கப்பட்ட ஆண்டு, திட்டத்தின் வகைகள், திட்டம் நிறுவப்பட்டதற்கான செலவினங்கள், நிதி ஆதாரம், நீர்நிலைகளின் பயன்பாடு, பாசன முறை போன்ற விவரங் கள் இந்த கணக்கெடுப்பில் சேகரிக்கப்படுகிறது. இந்த கணக்கெடுப்பு பணியை சேலம் மண்டலப் புள்ளியியல் இணை இயக்குநர் கமலக்கண்ணன் மொரப்பூர் வட்டாரத்தில் தாளநத்தம், நல்ல குட்லஅள்ளி வருவாய் கிராமங்களில் ஆய்வு செய்தார். இதை தொடர்ந்து பயிர் மதிப்பீட்டாய்வு திட் டத்தின் கீழ் பாப்பிரெட்டிப்பட்டி வட் டாரத்தில் போதக்காடு, கதிரி புரம் ஆகிய கிராமங்களில் நெல் பயிர் அறுவடை பரி சோதனை, அறுவடை நிலை குறித்தும் அவர் ஆய்வு செய் தார்.

சிறுபாசனஆதாரங்கள்

இந்த ஆய்வின் போது தர்மபுரி மாவட்ட புள்ளியியல் துணை இயக்குநர் மனோகரன், கோட் டப் புள்ளியியல் உதவி இயக்கு நர் கிருஷ்ணமூர்த்தி, மொரப்பூர் வட்டாரப் புள்ளியியல் ஆய்வாளர் கோபி குப்புராஜ், வட்டாரப் புள்ளியியல் ஆய் வாளர் ரொசாரியா, வேளாண்மை துணை அலு வலர் செந்தில் முருகன், உதவி வேளாண்மை அலுவலர்கள் சுரேஷ், மாயக் கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்ட னர். இந்த ஆய்வின் போது மண்டலப்புள்ளியியல் இணை இயக்குநர் கமலக்கண்ணன் கூறுகையில், இந்த கணக்கெடுப் பின் முக்கிய நோக்கம் எதிர்காலத்தில் சிறு பாசன ஆதாரங்கள் குறித்து திட்டங்கள் தீட்ட பயன்படுத் தப்படுகிறது. கணக்கெடுப்பு இந்தியா முழுவதும் நடத்தப்படுகிறது. முதன் முதலாக 1986-87-ம் ஆண்டு முதல் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. மத்திய அரசின் வழிகாட்டு தலின் படி இந்த பணி நடத் தப்படுகிறது. இந்த கணக் கெடுப் பில் தர்மபுரி மாவட்டம் முழுவதும் நிலத்தடி நீர் பாசன திட்டங்களான தோண் டப்பட்ட கிணறுகள், நீர்தேக் கங்கள், ஏரி, குளங்கள், குட்டை, ஊற்று கால்வாய், ஆறுகள், ஓடைகள் போன்ற வைகளை பற்றி கணக்கெடுக் கப்பட்டு வருகிறது என்று அவர் கூறினார்.

## <u>அருமனை பகுதியில் நிலத்தடி நீர்வளத்தை பாதுகாக்க குளங்களை பராமரிக்க வேண்டும் பொதுமக்கள் வலியுறுத்தல்</u>

அருமனை பகுதியில் நிலத்தடி நீர்வளத்தை பாதுகாக்க குளங்களை பராமரிக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

குளங்கள்

அருமனை பேரூராட்சிக்கு உள்பட்ட பகுதியில் பல சிறிய மற்றும் பெரிய குளங்கள் உள்ளன. இவற்றில் நீர்தேங்கி நிற்பதால் நிலத்தடி நீர்வளம் பெருகி, பேரூராட்சி பகுதி செழிப்படைந்து வந்தது. தற்போது, பேரூராட்சி யில் உள்ள பெரும்பாலான குளங்கள் போதியபராமரிப்பு இன்றி அழிவின் பிடியில் உள்ளது. குறிப்பாக, அருமனையில் சுமார் 1¼ ஏக்கர் நிலப்

பரப்பில் குளவிகுளம் உள்ளது. இந்த குளத்தில் தேங்கும் தண்ணீரை பொதுமக்கள் குளிக்கவும், துணிகளை துவைப் பதற்கும், கால்நடைகளை பராமரிக்கவும் பயன்படுத்தி வந்தனர். மேலும், இந்த குளத்தில் உள்ள தண்ணீர் மூலம், இடைக்குளம் ஏலா, குளவரம்பு, மணலி போன்ற பகுதிகளில் விவசாயம் செழித்து வந்தது. அத்துடன், இந்தகுளத்தை சுற்றியுள்ள ஏராளமான கிணறுகளில் சுத்தமான குடிநீர் கிடைத்து வந்தது. குறிப்பாக, குளத்தின் கரையில் ஒரு பெரிய கிணறு உள்ளது. இதில் இருந்து சுற்றுவட்டாரத்தை சேர்ந்த 30–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தண்ணீர் எடுத்துவருகின்றன.

மாசடைந்ததண்ணீர்

தற்போது, குளவிகுளம் போதிய பராமரிப்பு இன்றி, மண் நிரம்பி, தண்ணீர் மாசு அடைந்து அழிவின் பிடியில் உள்ளது. இதனால், சுற்று வட்டாரத்தில் நிலத்தடி நீர்வளம் குறைந்து, கிணறு களில் தண்ணீர் மட்டம் குறைந்து வருகிறது. இதுபோல், நெடுங்குளம், வள்ளிச்சிறைகுளம், கீழச்சேரிகுளம், சாலச்சகுளம் போன்ற குளங்கள் போதிய பராமரிப்பு இன்றி காணப் படுகின்றன. அருமனை பகுதியில் நிலத்தடி நீர்வளத்தை பாதுகாக்கும் வகையில் இந்த குளங்களை தூர்வாரி, சுற்றுச்சுவர் கட்டி, நீர்தேக்கி பராமரிக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர். இதன்மூலம் நிலத்தடி நீர்வளம் பெருகி, குடிநீர் தேவை பூர்த்தியடை வதுடன், விவசாயம் செழித்து வளரும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

## <u>14-வது ரோஜா மலர் கண்காட்சியை முன்னிட்டு சிறந்த ரோஜாக்களை வளர்ப்போருக்கு பரிசுகள் வழங்கப்படும் தோட்டக்கலை இணை இயக்குனர் தகவல்</u>

14-வது ரோஜாமலர்கண் காட்சியை முன்னிட்டு சிறந்த ரோஜாக்களை வளர்ப்போருக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளதாக தோட்டக்கலை இணை

இயக்குனர் மணி தெரி வித்து உள்ளார். இதுகுறித்து அவர் வெளி யிட்டு உள்ளசெய்திகுறிப்பில்கூறியிருப்பதாவது:-

ரோஜாமலர்கண்காட்சி

தமிழக அரசு தோட்டக் கலைத்துறையின் சார்பில் ஊட்டி ரோஜா பூங்காவில் 14-வது மலர் கண்காட்சி அடுத்த மாதம் (மே) 9-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை நடைபெற உள்ளது. இதில், ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருவார் கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.இந்த மலர் கண்காட்சியை முன்னிட்டு தனியார் தோட் டங்களில் ரோஜா தோட்டம் அமைத்து பராமரிப்பதற்கான போட்டிகள் நடத்தப்பட உள் ளது. இப்போட்டிக்கான பதி வுக்கட்டணம் ஒவ்வொரு இனத்திற்கும் ரூ.100 வீதம் செலுத்தி போட்டியில் கலந்து கொள்ளலாம். இதனை பதிவு செய்ய வருகிற 30-ந் தேதி கடைசிதேதியாகும்.

போட்டிகள்

இதேபோல் சிறந்த ரோஜா வளர்ப் போருக்கான போட்டிகள் நடத்தப்பட உள்ளன. இதில் பூந்தொட்டியில் வளர்க்கப் பட்ட பல்வேறு வகையான ஹை பிரிட் டீ ரோஜா, புளோரி யண்டா ரோஜா, மினியேச்சர் ரோஜா, ஸ்டேண்டர்டுரோஜா வுக்கான போட்டிகளும், ரோஜா வகைகளுக்கான போட்டியின் கீழ் ஹைபிரிட் டீ, புளோரியண்டா மற்றும் கொடி ரோஜா ஆகியவற்றில் போட்டிகளும் நடைபெறு கிறது. பசுமைக்குடில் அமைத்து வளர்க்கப் பட்ட ஹைபிரிட் ரகத்தை சேர்ந்த ரோஜா இன போட்டிக ளும் பெரிய குடுவைகளில் ரோஜா அலங்கரிப்பு, ரோஜா ரங்கோலி, ரோஜா மாலை, ரோஜா இதழ்களில் இருந்து தயாரிக்கப்பட்ட பொருட் களுக்கான போட்டிகளும்நடத் தப்படுகின்றன. இந்த போட்டி களில் வெற்றி பெறுபவர்களுக்குபரிசுகளும்வழங்கப்படும்.

பதிவுகட்டணம்

இத்துடன் தனியார்களின் ரோஜா தோட்ட ரோஜா கொய் மலர்கள், அரசு

சார்ந்த ரோஜா தோட்டங்களுக்கும் போட்டிகள் நடைபெற உள் ளது. இப்போட்டிக்கான ஒவ் வொரு இனத்திலும் போட்டி யிட பதிவுக்கட்டணம் ரூ.100 செலுத்தி போட்டியில் கலந்து கொள்ளலாம். இதனை பதிவு செய்யஅடுத்த மாதம் (மே) 8-ந் தேதி கடைசி தேதியாகும். மேலும், விவரங்களுக்கு ஊட்டி ரோஜா பூங்கா மேலா ளரை நேரிலோ அல்லது தொலைப்பேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**<u>காய்கறி உற்பத்தியை பெருக்குவதற்கு தரமான விதைகள் வினியோகம்</u>**

**<u>கலெக்டர் சங்கர் தகவல்</u>**



நீலகிரி மாவட்டத்தில் காய்கறி உற்பத்தியை பெருக்குவதற்குதரமான விதைகள் வழங்கப் படுவதாக மாவட்ட கலெக்டர் சங்கர் தெரி வித்தார்.

கருத்தரங்கம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டம் சார்பாக உயிர் உரங்கள் மற்றும் இயற்கை உரங்கள் தொழில் நுட்ப உற்பத்தி மேலாண்மை மற்றும் பயன்பாடு குறித்த கருத்தரங்கம் ஊட்டியில் நடைபெற்றது. இந்த கருத் தரங்கை மாவட்ட கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்து விவசாயிகளுக்கு நுண்ணுயிர் உரங்களை வழங்கினார். பின் னர் அவர் பேசும் போது கூறிய தாவது:-

தமிழக அரசு 2-வது பசுமை புரட்சி மூலமாக வேளாண் உற்பத்தியை 2 மடங்காகவும், பொருளாதாரத்தை 3 மடங்கு ஆக்குவதற்காக பல்வேறு திட் டங்களை செயல்படுத்தி வருகிறது. நீலகிரி மாவட் டத்தை பொறுத்தவரை நுண் ணுயிர் பாசன திட்டம் என சொல்லக்கூடிய தெளிப்பு பாசனம், சொட்டு

நீர் பாசன திட்டத்தை செயல்படுத்தி வரு கிறோம்.
தரமான விதைகள்
நீலகிரி மாவட்டத்தில் காய் கறி உற்பத்தியை பெருக்கு வதற்கு தரமான விதைகளை வழங்கி வருகிறோம். விவசாயி களின் பழுவை குறைப்பதற்கு மானிய விலையில் டிராக்டர் முதல் பவர் டீல்லர் வரை வழங்கப்படுகிறது. மேலும், பசுமை குடில் அமைப்பதற்கு மானிய தொகை வழங்கி வருகிறோம். தோட்டக்கலை பயிர்கள் பரப்பை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டு வருகிறது. விவசாயிகளுக்கும், வேளாண்மை அலுவலர்களுக் கும் இடைவெளியை குறைக் கும் வகையில் புதிய திட்டங் களை தமிழக அரசு தொடங்கி உள்ளது. இத்திட்டத்¢தின்மூலம் ஒவ்வொரு வேளாண் அலுவ லர்களும் முதல் வாரத்தில் திங் கள் முதல் வியாழன் வரை யிலும், இரண்டாம் வாரத்தில் திங்கள் முதல் வியாழன் வரை யிலும் மாதத்தில் எட்டு நாட் கள் கிராமத்தில் சென்று மக்க ளின் குறைகளை கேட்டறிந்து அவர்களின் பிரச்சினைகளை சீர் செய்து வருகின்றனர். அதிகலாபம்பெறலாம்.
அதனை ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க திட்டத் தின் கீழ் வேளாண்மை உதவி களை செய்து வருகின்றோம். வேளாண்மை உதவிகளை 20 உறுப்பினர்கள் கொண்ட ஆர் வலர்களை கொண்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது. இந்த குழுவில் பல்வேறு கருத்துக் களை தெரிந்து கொண்டு விவ சாயிகளுக்கு தெரிவிக்க வேண் டும். புதிய தொழில் நுட்பத்தில் உள்ள அதனை எவ்வாறு செயல்படுத்துகிறோம். பூச்சி நோய் மருந்துகள் தாக்காத ரகங்கள் மற்றும் தாக்கும் ரகங் கள் பற்றி தெரிவிப்பார்கள். அதன்படி பயிரிட்டு உற்பத் தியை அதிகப்படுத்தி அதிக லாபம் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார். இந்த நிகழ்ச்சியில், வன மரபியல் மற்றும் மரபெருக்கு நிறுவன விஞ்ஞானி மோகன், இலவச வேலைவாய்ப்பு பயிற்சி நிலைய இயக்குனர் ஜம்புநாதன் உள்பட ஏராள

மானோர் கலந்து கொண்ட னர். முன்னதாக பழனிகுமார் வரவேற்றார். முடிவில் ஹானா டிக்சன் நன்றி கூறினார்.

**<u>பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் பருத்தி ஏலம் 15–ந் தேதிக்கு மாற்றம்</u>**



பெரம்பலூர் வடக்குமாதவி சாலையில் அமைந்துள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை அன்று பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இதுவரை 2,262 குவிண்டால் பருத்தி ரூ.87.15 லட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டு 495 விவசாயிகள் பயன டைந்துள்ளனர். கடந்த 7–ந் தேதி நடைபெற்ற பருத்தி ஏலத்தில் 45 விவசாயிகள் ஆர்.சி.எச். ரக பருத்தி 658 மூட்டைகளும், டி.சி.எச். ரக பருத்தி 40 மூட்டைகளும் என மொத்தம் 698 மூட்டைகள் (25,762 கிலோ) கொண்டு வந்து ரூ.10 லட்சத்து 22 ஆயிரத்து 295–க்கு விற்பனை செய்யப்பட்டது. வருகிற 14–ந் தேதி (செவ்வாய்க்கிழமை) தமிழ் புத்தாண்டு வருவதால் பருத்தி ஏலம் 15–ந் தேதி (புதன்கிழமை) அன்று நடைபெறும் என கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தூத்துக்குடியில் இளநீர் விற்பனை மும்முரம்**



தூத்துக்குடி, தூத்துக்குடியில் கோடை வெயில் அதிகரித்து இருப்பதால் இளநீர் விற்பனை மும்முரமாக நடந்து வருகிறது.

<u>வெயில் தாக்கம்</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இந்த நிலையில் திடீரென மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் லேசான மழை பெய்தது. இதனால் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. தற்போது மீண்டும் வெயிலின் தாக்கம் அதிகரித்து உள்ளது. பகல் நேரங்களில் வெளியில் நடமாட முடியாத அளவுக்கு கோரதாண்டவம் ஆடி வருகிறது. இதனால் மக்கள் வெயிலின் தாக்கத்தை குறைக்கும் வகையில் குளிர்ச்சியான பழங்கள், குளிர்பானங் களை நாடிச் செல்கின்றனர்.

<u>இளநீர் விற்பனை</u>

இதனால் தூத்துக்குடியில் பல இடங்களில் தற்காலிக குளிர்பான கடைகள் தொடங்கப்பட்டு இருக்கின்றன. இளநீர், கம்பங்கூழ், கரும்புச்சாறு, தர்பூசனி பழம் விற்பனை மும்முரமாக நடக்கிறது. வெளி மாவட்டங்களில் இருந்து தூத்துக்குடிக்கு இளநீர் விற்பனைக்காக வந்து குவிக்கப்படுகிறது. பல்வேறு கடைகளில் இளநீர் சுமார் ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. புதிய பஸ்நிலையம் அருகே அரசு சார்பில் தொடங்கப்பட்ட மலிவு விலை இளநீர் கடையில் ரூ.20–க்கு இளநீர் விற்பனை செய்யப்படுகிறது. இதனை ஏராளமான மக்கள் வாங்கி குடித்து செல்கின்றனர்.

**<u>உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்க பொதுக்குழு கூட்டம்</u>**



திருச்சி மாவட்ட உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் மத்திய பஸ் நிலையம் அருகே ஒரு ஓட்டலில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் (பொறுப்பு) திருக்குமரன் தலைமை தாங்கினார். மாவட்ட அமைப்பு செயலாளர் விஸ்வநாதன், இணை

செயலாளர் திருப்பதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில தலைவர் இசக்கிமுத்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினார். மாநில பொது செயலாளர் துரை.அருளானந்தம் வாழ்த்தி பேசினார். உதவி வேளாண் அலுவலர்களுக்கு அடிப்படை ஊதியத்தை ரூ.9 ஆயிரத்து 300 ஆக உயர்த்தி வழங்க வேண்டும், பயிர் காப்பீட்டு திட்டத்தின் சிறப்புகளை விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு திட்ட நிறுவத்தினர் எடுத்து விளக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் ரமேஷ்குமார், தணிக்கையாளர் துரைசங்கர் உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாக மாவட்ட செயலாளர் செல்வம் வரவேற்று பேசினார். முடிவில் கூட்டுறவு சிக்கன நாணய சங்க தலைவர் மருததுரை நன்றி கூறினார்.

**<u>தாராபுரத்தில் மழை; பொதுமக்கள் மகிழ்ச்சி</u>**

தாராபுரம் பகுதிகளில் கடந்த சில தினங்களாக கடுமையாக வெயில் சுட்டெரித்து வருகிறது. இதனால் குழந்தைகள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் வெயிலின் தாக்கத்தை தணிக்க முடியாமல் பெரிதும் அவதிப்பட்டனர். மேலும் இளநீர், தர்ப்பூசணி உள்ளிட்ட நீர் ஆதாரங்களை பருகி உடல் சூட்டை தணித்தனர். இந்த நிலையில் தாராபுரத்தில் நேற்று காலையில் இருந்து வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. மாலை 3.30 மணிக்கு வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டதோடு, பலத்த காற்றும் வீசியது. பின்னர் 3.40 மணி அளவில் திடீரென லேசான மழை பெய்தது. இதனால் குளிர்ந்த காற்று வீசி, வெயிலின் தாக்கம் குறைந்தது. சிறிது நேரம் பெய்த இந்த மழையால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.